**ஊவாபரணகம பிரதேச சபை**

**பதுளை மாவட்டம்**

-----------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மே 15 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜுன் 27 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 13 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, ஊவாபரணகம பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

(அ) ஊவா மாகாண சபை நிதியத்தில் இருந்து பெற்றிருந்த கடனின் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன் மீதி ரூபா 2,000,000 தொகை எனினும் அதனை ரூபா 2,750,000 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் பல பொறுப்புக்கள் ரூபா 750,000 இனால் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த முத்திரை கட்டண நிலுவை வருமானம் ரூபா 1,530,466 உம், நீதிமன்றத் தண்டப்பண நிலுவை வருமானம் பெறுவனவுகள் எனக் கணித்து கணக்கீடு செய்திருந்துள்ளமையால், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டண நிலுவை வருமானம் ரூபா 1,530,466 இனால் மிகையாகவும் நீதிமன்றத் தண்டப்பண நிலுவை வருமானம் அதே தொகையால் குறைவாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு பில் பத்திரங்கள் சமர்பிக்கப்பட்டிருந்த 03 நிர்மாண வேலைகளின் விலைப்பட்டியல்களின் பெறுமதியை கவனத்தில் எடுக்காமல் மதிப்பீட்டு பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், மீளாய்வாண்டிற்கான செலவுகள் மற்றும் வருட இறுதியில் உள்ளவாறு பொறுப்புக்கள் ரூபா 335,309 வீதம் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை மந்திரிமார் சமர்பித்திருந்த அபிவிருத்தி திட்டங்களின் அடிப்படையில் ரூபா 664,000 பெறுமதியான 26 நிர்மாண வேலைகளுக்காக கடன் கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் ஆண்டுக்கான செலவுகள் மற்றும் திசெம்பர் 31 திகதிய உள்ளவாறு பொறுப்புக்கள் ரூபா 664,000 வீதம் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன.

(உ) மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை ஏற்பாடுகளின் கீழ் பெற்றுக் கொடுத்திருந்த 10 பல்கரும நடமாடும் கடைகளின் பெறுமதி ரூபா 265,000 இனை மற்றும் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாடுகளின் கீழ் பெற்றுக் கொடுத்துள்ள 408 கொடிக் கம்பங்களின் பெறுமதி ரூபா 403,316 தொகையினை மூலதனப்படுத்தாமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நடைமுறை அல்லாது சொத்துக்களின் பெறுமதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கின் மீதி ரூபா 668,316 வீதம் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது.

(ஊ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவில், தீர்க்கப்படாத முற்பணங்கள் ரூபா 40,000 இனை நிதிக் கூற்றுக்களில் காட்டப்படாமையால் தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 40,000 இனால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------

ஒரு கணக்கு விடயம் தொடர்பாக துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதி ரூபா 686,458 ஆக காணப்பட்ட போதிலும் நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் மீதி ரூபா 626,456 ஆக காணப்படாமையால் ரூபா 60,002 வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------------

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 49,450,095 ஆக காணப்பட்டதுடன் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 35,226,777 ஆகும்.

1.3.4 கணக்காய்விற்குச் சான்றுகள் இன்மை

------------------------------------------------------------

ரூபா 35,414,074 பெறுமதியான 02 கணக்கு விடயங்களுக்காக பட்டோலைகள் சமர்பிக்கப்பட்டமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

------------------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 132 | பிரதேச சபை மந்திரிமாருக்கு பிரயாணப் பைகள் மற்றும் குடைகள் வழங்குவதற்காக ரூபா 57,000 சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டுள்ளது. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப் பிரமாணங்கள் 371 | சபையினால் 1991 – 2011 இடைப்பட்ட கால வீச்சில் 10 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 686,458 இற்கான முற்பணங்கள் 2014 திசெம்பர் வரையும் தீர்த்திருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணங்கள் 1646 | சபைக்குச் சொந்தமான 04 வாகனங்களை 2014 மார்ச் முதல் திசெம்பர் வரை இடைப்பட்ட கால வீச்சில் ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. |
| (இ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 212 மற்றும் இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 751 | சபைக்கு பெற்றுக் கொடுத்துள்ள ரூபா 403,316 பெறுமதியான 408 கல்வனயிஸ் கொடிக் கம்பங்களை தொக்கு பதிவேட்டில் அல்லது பொருட் பதிவேட்டில் உட்படுத்தியிருக்கவில்லை. |
| (ஈ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 திகதி இலக்கம் 1980/46 கொண்ட சுற்றுநிருபம் | சபைக்குச் சொந்தமான 77 கடைகளில் மாதாந்த வாடகை சுற்றுநிருப ஏற்பாடுகளின் பிரகாரம் பெறுமதி மதிப்பீடு மேற்கொண்டிருக்கவில்லை. |
| (உ) 2010 மே 25 திகதி இலக்கம் 04/2010 கொண்ட ஓய்வூதியச சுற்று நிருபம் மற்றும் ஊவா மாகாண ஆளுனர் செயலாளரின் இலக்கம் 1/8/31(1) மற்றும் 2014 திசெம்பர் 08 திகதிய கடிதம் | சபையின் நீர் திட்டங்களில் கடமையாற்றும் நீர் விநியோகிப்போர் என படி செலுத்தும் அடிப்படையில் 04 ஊழியர்களுக்காக அரச சேவை சேமலாபநிதியத்திற்கான பங்களிப்பு தொகை செலுத்தியிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,143,360 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,219,576 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 2,076,216 இற்கான பிரதிகூலமான முரண் ஒன்று அவதானிக்கப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

------------------------------

2.2.1 வாடகை

-------------

(அ) 2014 திசெம்பர் 31 அளவில் சபைக்குச் சொந்தமான 10 கடைகளுக்காக 13 மாதங்கள் முதல் 64 மாதங்கள் வரை கால வீச்சில் காணப்பட்ட நிலுவை வாடகை ரூபா 118,059 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை.

(ஆ) 08 கடைகள் தொடர்பாக 1990 – 1996 காலப்பகுதி தொடர்பாக காணப்பட்ட நிலுவை கடை வாடகையை அறவீடு செய்வதற்காக வழக்கு தாக்கல் செய்திருந்ததுடன் அந்த வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் நிலுவை தொகையை அறவீடு செய்திருக்கவில்லை. 2014 திசெம்பர் 31 திகதி வரை அக்கடைகளுக்கான நிலுவை தொகை ரூபா 108,616 ஆகும்.

2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,500,000 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 3,324,759 ஆகும்.

3 செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

-------------------------------------------------

(அ) சபையின் ஊழியர்கள் 13 பேரினால் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 120,900 இற்கான பிணைப் பணத்தினை ஊழியர்களின் பேரில் வங்கிக் கணக்குகளில் முதலீடு செய்திருக்கவில்லை.

(ஆ) 2013 நெறிமுறை அடிப்படை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தவுல்தென ஞானேஸ்வர பௌத்த மத்திய நிலையத்தின் அபிவிருத்திக்காக 2014 பெப்ரவரி 26 திகதி உருக்கு கம்பிகள் மற்றும் சீமெந்து பெறுவதற்காக சபைக்கு ரூபா 99,040 வழங்கியிருந்ததுடன், குறிப்பிட்ட அபிவிருத்தித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(இ) சபையினால் 2013 நெறிமுறை அடிப்படையிலான உதவியின் கீழ் ரூபா 229,960 தொகை ஒன்று செலுத்தி பன்னலவெல நீர்த்திட்டத்திற்காக கொள்வனவு செய்திருந்த நீர் மோட்டார் அந்த நீர் திட்டத்திற்காக பயன்படுத்தியிருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத / குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------------

(அ) இலக்கம் EMDI – 120 கொண்ட பாம் மாஸ்டர் கைடிரக்டர் வண்டியை அகற்றுவதற்காக அல்லது பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சர்வதேச உணவு மற்றும் விவசாய அமைப்பின் உலர் வலய வாழ்வாதாரத்திற்காக உதவும் செயற்திட்டத்தின் கீழ் 200 குடும்பங்களுக்கு பயன் வழங்கும் நோக்கில் ரூபா 1,107,927 தொகை ஒன்று செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு 2012 அக்டோபர் 31 திகதி திறந்த கட்டடம் இதுவரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3.3 ஒப்பந்த நிருவாகம்

-----------------------------

சபையினால் 2010 ஆண்டின் நெறிமுறை அடிப்படையின் உதவியின் கீழ் செயற்படுத்தப்பட்ட 03 நிர்மாண வேலைகளுக்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 274,255 தொகை ஒன்று முற்பணமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும், சபையினால் போலியான தகவல்கள் சமர்பித்தல் மற்றும் குறிப்பிட்ட காலப்பகுதியில் வேலை பூர்த்தி செய்யாமை காரணமாக சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டுள்ள ரூபா 274,255 இற்கான தொகை ஒன்று மாகாண சபையில் இருந்து மீளளிப்பு செய்திருக்கவில்லை.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்